# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **208/ந/2017**

ஆணை எண். **20/2018**

நாள் : **07/02/2018**

**திருமதி R. மல்லிகா,**
**குடியாத்தம் – 632602**

– **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
காஞ்சிபுரம் பெருநகராட்சி.,
காஞ்சிபுரம்

– **எதிர் மனுதாரர்கள்**

வேலூர் மாவட்டம், குடியாத்தம், புதுப்பேட்டை, எண்.19–A, பீம இராஜ முதலி தெரு முகவரியில் வசிக்கும் திருமதி R. மல்லிகா அவர்களின் 23.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 25.10.2017 அன்று பெறப்பட்டு, 208/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு சம்பந்தமாக காஞ்சிபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், குடியாத்தம், புதுப்பேட்டை, எண்.19–A, பீம இராஜ முதலி தெரு முகவரியில் வசிக்கும் திருமதி R. மல்லிகா என்பவர் தான் காஞ்சிபுரம் நகராட்சியில் 28.01.2009–இல் மேலாளராகப் பணியில் சேர்ந்து, பின்னர் வயது முதிர்வு காரணமாக 31.03.2010–இல் ஓய்வு பெற்றுள்ளதாகவும், மேற்குறிப்பிட்ட பணிக்கான ஊதியம் 27.07.2015 நாளிட்ட காஞ்சிபுரம் நகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை எண். 4287/பி1/2015–இல் நிர்ணயம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்ட செயல்முறை ஆணையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில், ஓய்வூதியப் பலன்கள் வழங்குவதற்கான கருத்துருவினை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அனுப்பி வைக்க நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்து காஞ்சிபுரம் நகராட்சி ஆணையர் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார். இதன் விவரம் 03.07.2017 நாளிட்ட கடிதத்தில் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கை குறித்து காஞ்சிபுரம் நகராட்சி ஆணையர் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டுள்ள நிலையில், 19.02.2018 அன்று முறையீட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி அலுவலர்களிடம் மேற்கொள்ளப்

படவிருந்த விசாரணை இரத்து செய்யப்படுகிறது. மேலும், இந்நேர்வு சம்பந்தப்பட்ட நடவடிக்கையினை மேலும் காலம் தாழ்த்தாமல் விரைவான நடவடிக்கையினை மேற்கொள்ளும்படி நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது. முறையீட்டு மனுதாரரும், காஞ்சிபுரம் நகராட்சி ஆணையரை தொடர்பு கொண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரங்களை அறிந்து கொள்ளுமாறு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், **7–**ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப் பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

**பெறுநர்**

1. **நகராட்சி ஆணையாளர்,**
   **காஞ்சிபுரம் பெரு நகராட்சி,**
   **காஞ்சிபுரம்.**

2. **திருமதி R. மல்லிகா,**
   **எண்.19–A, பீமராஜ முதலி தெரு,**
   **புதுப்பேட்டை,**
   **குடியாத்தம் – 632 602.**

**நகல் :** **முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**